**IP.No.19/2023**

**PW1 –ரத்தினாதேவி**

**க/பெ.ரவி**

**நாள். 15.04.2025.**

**<u>மனுதாரர் தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் 10 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. என் கணவர் ரவி திருப்பூர் பெருந்தொழுவில் கால்நடை லைவ்ஸ்டாக் ஆய்வாளராக பணிபுரிந்து வந்தார்.2015 ஆம் ஆண்டு அவர் பணி ஓய்வு பெற்றார்.ஜீ.ஆர் கார்மென்ட்ஸ் நிறுவனங்களின் வரவு செலவுகளை அவர் தான் பார்த்து வந்தார் என்றால் சரிதான். என் கணவர் காலமாகும் வரை அந்த நிறுவனத்தின் வரவு செலவுகள் பற்றி எனக்கு எதுவும் தெரியாது .நானும் என் கணவர் இருவரும் அந்த நிறுவனத்தை பார்த்துக் கொண்டிருந்தோம் நான் அதில் வேலை செய்து கொண்டு இருந்தேன்.

2. மேற்படி நிறுவனத்தில் பனியன் உற்பத்தி செய்து வந்து கொண்டிருந்தோம். பத்தாவது எதிர்மனுதாரரின் கட்டிடத்தை வாடகைக்கு எடுத்திருந்தோம். அந்த வாடகை கட்டடத்தை தான் பி செட்யூல் முதல் ஐட்டம் சொத்தாக காட்டி இருக்கிறேன் என்று சொன்னால் ஆமாம். மாத வாடகையாக 60 ஆயிரம் ரூபாய் செலுத்திக் கொண்டிருந்தேன் என்றும் சொன்னால் சரிதான் .அக்டோபர் 2021 ஆம் ஆண்டு வரை மாத வாடகை செலுத்தி விட்டேன். இரண்டு மாத வாடகை பாக்கியாக நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களின் வாடகை நின்றுவிட்டது என்றும் சொன்னால் சரிதான். அந்த இரண்டு மாத வாடகையை அட்வான்ஸ் கழித்துக் கொண்டு வீட்டை காலி செய்து விட்டு வந்து விட்டோம் .

3. 3.12.2021 தேதியன்று 32 லட்சம் ரூபாய் ராமசாமியிடம் கடன் வாங்கி இருக்கிறோம் என்றால் ஆமாம். .ஒரே மாதத்தில் திருப்பி தந்து விடுவதாக

3.1.2022 தேதியிட்ட காசோலை ஒன்றை கொடுத்திருக்கிறேன் என்று சொன்னால் இல்லை. 32 லட்சம் ரூபாயில் 6 லட்சம் ரூபாய் அட்வான்ஸை கழித்துக் கொண்டுதான் வீட்டை காலி செய்து விட்டு வந்தோம் .ஆறு லட்சம் ரூபாய் கட்டிடத்திற்கு அட்வான்ஸாக கொடுத்திருக்கும் விவரத்தை வழக்கில் சொல்லவில்லை என்றால் ஆமாம்.

4. நான் கடன் வாங்கிய போது ஷெட்யூல் பி ஐட்டம் இரண்டாவது சொத்து பத்திரங்களை ராமசாமியிடம் கொடுத்து இருக்கிறோம் என்று சொன்னால் சரிதான் .பி செட்யூல் முதலாம் ஐட்டம் சொத்தில் என்னென்ன பொருட்கள் இருந்தது என்று குறிப்பிட்டு நான் சொல்லவில்லை என்றால் சரிதான். பொருட்களையும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும் அதன் மதிப்பும் குறிப்பிட்டு சொல்ல வில்லை என்றால் சரிதான் .உண்மையில் பொருட்களை அதாவது மிஷினரியை முதலாவது ஐட்டத்தை விட்டுவிட்டு சென்றிருந்தால் நான் தனித்தனியே சொல்லி இருப்பேன் என்றும் நான் அப்படி விட்டு விட்டு செல்லவில்லை என்றும் அதனால் தான் நான் எந்தெந்த பொருட்கள் அங்கு இருந்தது என்று குறிப்பிட்டு சொல்லாமல் அதற்கு மதிப்பும் சொல்லாமல் இருக்கிறேன் என்று சொன்னால் சரி அல்ல .

5. மேற்சொன்ன முகவரியில் இருப்பு ஸ்டாக் இருந்தது என்றும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அதன் மதிப்பும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான் .நான் எந்த பொருளும் விட்டு செல்லவில்லை அதனால் தான் அந்த ஸ்டாக்கை பற்றி நான் எதுவும் சொல்லவில்லை என்று சொன்னால் சரி அல்ல. நான் ஜனவரி 2022 எல்லா பொருட்களையும் எடுத்துக்கொண்டு வீட்டை காலி செய்துவிட்டேன் என்று சொன்னால் வீட்டுப் பொருட்களை மட்டும்

எடுத்துக் கொண்டேன் .கம்பெனியில் இருந்து அனைத்து பொருட்களையும் எடுத்துக்கொண்டு தான் சென்றேன் என்று சொன்னால் சரியில்லை.

6. தற்போது பத்தாம் எதிர் மனுதாரர் இடம் புதிய வாடகைதாரர்கள் வந்து வாடகைக்கு இருக்கிறார்கள் என்றும் நான் சொல்வது போல் அங்கு 50 லட்சம் ரூபாய் மதிப்பிற்கும் எந்த ஸ்டாக்கும் பனியன் கம்பெனி பொருட்களும் இல்லை என்று சொன்னால் சரி அல்ல .ராமசாமிக்கு கொடுக்க வேண்டிய 32 லட்சம் ரூபாயை ஏமாற்ற வேண்டும் என்பதற்காகத்தான் இந்த மனுவை தாக்கல் செய்திருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

7. மற்ற கடந்தாரர்களாக நான் குறிப்பிட்டிருக்கும் எதிர்மனுதாரர்கள் என்னால் வழக்கிற்காக ஜோடிக்கப்பட்டவர்கள் என்றும் அதனால் தான் அவர்கள் இந்த நீதிமன்றத்தில் வழக்கில் ஆஜராகவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கு காலமான என் கணவர் செய்திருக்கும் கணக்கு வழக்குகளை தான் தாக்கல் செய்திருக்கிறேன் என்றும் நான் எந்த பரிவர்த்தனை செய்தேனோ அதனை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரி அல்ல .என் கணவர் பட்ட கடனுக்காக தான் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் நான் சொந்தமாகப் பட்ட கடனுக்காக இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல இந்த ஒரு காரணத்தினாலேயே இந்த மனு நிலைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

8. என் கணவருக்கு நானும் என் மகனும் வாரிசுகள். ஆனால் என் மகனை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றாலும் சரிதான். அவருக்கும் இந்த வழக்கில் பங்கு இருக்கிறது என்பதால் அவரை சேர்க்காத தோஷத்திற்காக மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல .நான் தான் கடன்

வாங்கிவிட்டு ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றும் ராமசாமிக்கு நான் கடன் தொகையை செலுத்த வேண்டியிருக்கிறது என்று சொன்னால் சரியல்ல. ராமசாமி எனக்கு எந்த விதமான தொகையும் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை என்றும் சொன்னால் சரி அல்ல .

**15 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

V SREE VIDYA

Digitally signed by V SREE VIDYA
DN: cn=V SREE VIDYA, ou=JUDICIAL JUDGE , o=THE PRINCIPAL SUBORDINATE COURT , l=TIRUPPUR, st=TAMIL NADU, c=91

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.